செய்தி வெளியீடு எண். 199 நாள்: 13.04.2018

# பள்ளிச்செல்லா குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் கணக்கெடுப்பு நடத்தி பள்ளியில் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுரை

அனைவருக்கும் கல்வி இயக்கம், திருவள்ளூர் மாவட்டத்தில் 6-18 வயதுடைய பள்ளிச்செல்லா குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை கணக்கெடுக்கும் பணியினை மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 05.04.2018 அன்று ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பு பணியினை 16.04.2018 முதல் 28.05.2018 வரை மேற்கொண்டு, ஒன்றியம் வாரியாக ஆசிரியர் பயிற்றுநர்கள், ஆசிரியர்கள், ஊராட்சி / பேரூராட்சி / நகராட்சி பொறுப்பாளர்கள், கிராம செவிலியர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், கிராம கல்விக் குழு உறுப்பினர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் ஆகியோரை கொண்ட குழு அமைத்து அனைத்து வாழிடங்களிலும் எந்தவொரு வீடும் விடுபடாமல் கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்படும் பள்ளிச்செல்லா குழந்தைகள் அனைவரையும் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் நடத்தப்படும் உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி மையம், நீண்ட கால மற்றும் குறுகிய கால சிறப்பு பயிற்சி மையங்களிலும், மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் அனைவரையும் உள்ளடங்கிய கல்வி சிறப்பு பயிற்சி மையங்களிலும் தமிழக அரசின் மாணவர்கள் நலத்திட்டம் அனைத்தும் கிடைத்திடும் வகையில் ஜுன் முதல் வாரத்தில் சேர்த்து கல்வி வழங்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும் எனவும் செங்கல் சூளையில் புலம் பெயர்ந்து வந்துள்ள தொழிலாளர்களின் 2190 குழந்தைகளுக்கும் சிறப்பான கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கழிப்பறை வசதி ஏற்படுத்தி தருதல் போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பொது மக்களும் பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிந்தால் 1077, 1098 போன்ற இலவச எண்களை தொடர்பு கொள்ளவும் மற்றும் அனைத்து ஒன்றியங்களிலும் உள்ள அனைவருக்கும் கல்வி இயக்க வட்டார வள மையங்களை தொடர்பு கொண்டு குழந்தைகளின் விவரங்களை அளித்து பள்ளியில் சேர்க்க வேண்டும் எனவும் ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் முனைவர். த. ராஜேந்திரன், உதவி திட்ட அலுவலர் திரு.வெ.எ.நந்தகுமார், தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**